பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

29 08 2025 FRIDAY 7.15 PM

தலைப்புச் செய்திகள்

1. ரஷ்யா – யுக்ரைன் இடையேயான பிரச்சினைக்கு சுமூக தீர்வுகாண இந்தியா எப்போதும் துணை நிற்கும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி 7 புள்ளி எட்டு சதவீதம் அளவிற்கு வளர்ச்சி கண்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

3. தமிழ்நாடு மத்திய பல்கலைக்கழகத்தில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக மத்திய அரசு 385 கோடி ரூபாயை விடுவித்துள்ளது.

4. உத்ராகண்டில் பெருமழை மற்றும் நிலச்சரிவு காரணமாக, ஐந்து பேர் உயிரிழந்தனர். 11 பேரை தேடும் பணி நடைபெற்று வருகிறது.

5. ஆசிய துப்பாக்கிச் சுடும் சாம்பியன் போட்டியில், இந்தியா இன்று ஒரு தங்கம், ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

- இனி விரிவான செய்திகள்-

<<<<<<>>>>>>

ரஷ்யா – யுக்ரைன் இடையேயான பிரச்சினைக்கு அமைதி பேச்சுக்கள் மூலமே தீர்வுகாணப்பட வேண்டும் என்பதே இந்தியாவின் நிலைப்பாடு என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

அரசுமுறைப்பயணமாக ஜப்பான் சென்றுள்ள அவர், டோக்கியோவில் அந்நாட்டு நாளிதழுக்கு அளித்த பேட்டியில் இதனை தெரிவித்தார்.

இந்தியாவின் நிலைப்பாட்டிற்கு ரஷ்யாவும், யுக்ரைனும் வரவேற்பு தெரிவித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இவ்விரு நாடுகளுக்கு இடையேயான பிரச்சினைக்கு சுமூக தீர்வுகாண இந்தியா எப்போதும் துணை நிற்கும் என்றும் திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி 7 புள்ளி எட்டு சதவீதம் அளவிற்கு வளர்ச்சி கண்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

வேளாண் துறையின் சிறப்பான செயல்பாடுகளே இதற்கு முக்கிய காரணம் என்று மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

விரைவான பொருளாதார வளர்ச்சியை கண்டுவரும் நாடாக இந்தியா திகழ்கிறது என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த காலக்கட்டத்தில் சீனாவின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி ஐந்து புள்ளி இரண்டு சதவீதம் அளவிற்கு மட்டுமே இருந்ததாக அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, பிரதமர் திரு நரேந்திர மோடியின் தலைமையின்கீழ் நாடு விரைவான பொருளாதார வளர்ச்சியை கண்டு வருவதை இது எடுத்துரைப்பதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர் வேளாண், உற்பத்தி, கட்டுமானம் மற்றும் சேவைத்துறைகள் இதன்மூலம் பெரிதும் பயனடைந்திருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>

தொழில்துறையினருக்கு மத்திய அரசு தொடர்ந்து ஆதரவு அளிக்கும் என்று தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், சுயசார்பு இந்தியா இயக்கத்திற்கு வலுசேர்க்கும் வகையில் தொழில்துறையினர் செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

தொழில்துறைக்கு தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு வழங்கும் என்றும் திரு பியூஷ்கோயல் கூறினார்.

<<<<<<>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடியின் தாயார் குறித்து சர்ச்சைக்குரிய கருத்துக்கள் தெரிவித்தற்காக காங்கிரஸ் முன்னாள் தலைவர் திரு ராகுல்காந்தி மன்னிப்பு கோர வேண்டும் என்று மத்திய அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி வலியுறுத்தியுள்ளார்.

செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் அவர் இக்கோரிக்கையை விடுத்தார்.

திரு ராகுல்காந்தி தெரிவித்த கருத்துக்கள் மன்னிக்க முடியாதது என்றும் அவர் கூறினார்.

இப்பிரச்சினையில் திரு ராகுல்காந்தியின் தாயார் திருமதி சோனியாகாந்தி தலையிட்டு அவருக்கு உரிய அறிவுரையை வழங்க வேண்டும் என்றும் திரு பிரல்ஹாத் ஜோஷி கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>>

ஆயுர்வேதா மற்றும் பாரம்பரிய மருத்துவ முறைகளுக்கான சர்வதேச அங்கீகாரம் அதிகரித்து வருவதாக மத்திய அமைச்சர் திரு பிரதாப் ராவ் ஜாதவ் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் பிரிக்ஸ் சுகாதார உச்சிமாநாட்டில் கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.

நாடு முழுவதும் ஆயிரம் ஆயுர்வேதா கல்லூரிகள் செயல்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

*இதில் 500-க்கும் மேற்பட்ட கல்லூரிகளில் ஆராய்ச்சிப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.*

*ஆயுஷ்துறையில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்காக 25 நாடுகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.*

*<<<<<<>>>>>*

*தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகளில் அரசியலுக்கு அப்பாற்பட்டு மக்கள் பிரதிநிதிகள் செயல்பட வேண்டும் என்று மக்களவைத் தலைவர் திரு ஓம். பிர்லா கேட்டுக்கொண்டுள்ளார்.*

*இன்று புவனேஷ்வரில் ஷெட்யூல்டு வகுப்பினர் நலனுக்கான நாடாளுமன்ற மற்றும் சட்டப்பேரவை உறுப்பினர்கள் குழுவின் தலைவர்கள் பங்கேற்ற மாநாட்டில் கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.*

*மக்களவை மற்றும் சட்டப்பேரவை நடவடிக்கைகள் ஆக்கப்பூர்வமாக செயல்பட உறுப்பினர்கள் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்றும் திரு ஓம். பிர்லா கேட்டுக்கொண்டார்.*

*<<<<<<>>>>>*

*தமிழ்நாடு மத்திய பல்கலைக்கழகத்தில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக மத்திய அரசு 385 கோடி ரூபாயை விடுவித்துள்ளது.*

*உயர்கல்வி நிதி முகமை மூலம் இந்த தொகை விடுவிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.*

*திருவாரூரில் உள்ள இந்த பல்கலைக்கழகத்தில் மாணவர் விடுதிகள், புதிய ஆய்வகங்கள் மற்றும் வளாகங்களை கட்டுவதற்கும், அறிவியல் ஆய்வகங்களுக்கு பயன்படுத்தப்படும் உபகரணங்களை கொள்முதல் செய்வதற்கும் ஏதுவாக இந்த நிதி விடுவிக்கப்பட்டிருப்பதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*<<<<<<>>>>>*

*பீகாரில் பெண்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதை உறுதி செய்யும் புதிய திட்டத்திற்கு அம்மாநில அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.*

*பாட்னாவில் முதலமைச்சர் திரு நிதிஷ்குமார் தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.*

*இந்த திட்டத்தின்கீழ், குடும்பத்தில் ஒரு மகளிர் வேலைவாய்ப்பை பெறும் நோக்கில் நிதியுதவி வழங்கப்பட உள்ளது.*

இதற்காக முதல் தவணையாக 10 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான விண்ணப்பங்கள் விநியோகம் விரைவில் தொடங்கும் என்றும் பீகார் அரசு கூறியுள்ளது.

<<<<<<>>>>>

உணவு பதப்படுத்துதல் துறையின் முனையமாக ஆந்திரா உருவெடுத்து வருவதாக அம்மாநில முதலமைச்சர் திரு சந்திரபாபு நாயுடு கூறியுள்ளார்.

இன்று விசாகப்பட்டினத்தில் உணவு உற்பத்தி தொடர்பான உச்சிமாநாட்டில் பங்கேற்று அவர் பேசினார்.

உணவு பதப்படுத்துதல் துறையில் இந்தியா முன்னணியில் இருப்பதாகவும், இதில் ஆந்திராவின் பங்கு ஒன்பது சதவீதமாக உள்ளது என்றும் திரு சந்திரபாபு நாயுடு கூறினார்.

<<<<<<>>>>>

மகாராஷ்ட்ராவில் 33 ஆயிரத்து 768 கோடி ரூபாய் முதலீட்டிற்கான ஒப்பந்தங்களில் மாநில அரசு கையெழுத்திட்டுள்ளதாக முதலமைச்சர் திரு தேவேந்திர பட்நவிஸ் கூறியுள்ளார்.

இன்று மும்பையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதுதொடர்பாக 17 ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டினார்.

இதன்மூலம், 33 ஆயிரம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

தொழில் முதலீட்டுக்கு உகந்த சூழ்நிலையை மகாராஷ்ட்ர அரசு ஏற்படுத்தியிருப்பதாகவும் திரு தேவேந்திர பட்நவிஸ் கூறினார்.

<<<<<<>>>>>

குஜராத்தில் கடந்த ஐந்தாண்டுகளில் 86 ஆயிரத்து 418 கோடி ரூபாய் அளவிற்கு முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளதாக அம்மாநில அரசு கூறியுள்ளது.

இதுதொடர்பாக, அம்மாநில அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இதன்மூலம் 3 லட்சத்து 98 ஆயிரம் புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொழில்முனைவோர்களுக்கு தொடர்ந்து ஊக்கம் அளிக்கப்பட்டு வருவதாகவும் அந்த செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

உத்ராகண்டில் பெருமழை மற்றும் நிலச்சரிவு காரணமாக, ஐந்து பேர் உயிரிழந்தனர். 11 பேரை தேடும் பணி நடைபெற்று வருகிறது.

*Rudraprayag Chamoli, Tehri மற்றும் Bageshwar மாவட்டங்கள் இதில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.*

*பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அம்மாநில அரசு கூறியுள்ளது.*

*தேசிய மற்றும் மாநில பேரிடர் மீட்புப் படைகள், காவல்துறை மற்றும் வருவாய்த்துறை ஒருங்கிணைந்து மீட்புப் பணிகளை மேற்கொண்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*இதற்கிடையே, உத்ராகண்ட் மற்றும் ராஜஸ்தானில் அடுத்த 7 நாட்களுக்கு கனமழை நீடிக்கக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.*

*குஜராத்தின் ஒரு சில பகுதிகளில் அதிகனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*கர்நாடகா, கேரளா, மஹாராஷ்ட்ரா, ஹிமாச்சலப்பிரதேசம், உத்தரபிரதேசம், மேற்குவங்கம் ஆகிய மாநிலங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளிலும் கனமழை பெய்யக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*<<<<<<>>>>>*

*<u>விளையாட்டுச்செய்திகள்</u>*

*ஆசிய துப்பாக்கிச் சுடும் சாம்பியன் போட்டியில், இந்தியா இன்று ஒரு தங்கம், ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.*

*கஸகஸ்தானின் Shymkent-ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் பிரிவில் Ankur Mittal தங்கப்பதக்கம் வென்றார்.*

*மகளிர் 50 மீட்டர் பிரிவில் Maini Kaushik வெண்கலப்பதக்கம் வென்றார்.*

*இதன் குழு பிரிவில் இந்தியாவிற்கு வெள்ளிப்பதக்கம் கிடைத்தது.*

*இப்போட்டியில் இந்தியா இதுவரை 45 தங்கம், 20 வெள்ளி, 18 வெண்கலப்பதக்கங்களை வென்று பதக்கப்பட்டியலில் தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறது.*

-------------

*ஆசியகோப்பை சைக்கிள் சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், ஒரு வெள்ளி, இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றது.*

*தாய்லாந்தில் நடைபெற்ற இப்போட்டியின் 3 கிலோமீட்டர் பிரிவில் Harshita Jakhar தங்கப்பதக்கம் வென்றார்.*

*மற்றொரு பிரிவில் அவர் வெள்ளிப்பதக்கத்தை கைப்பற்றினார்.*

ஆடவர் ஒரு கிலோ மீட்டர் சீனியர் பிரிவில் ரொனால்டோவும் மற்றும் ஜூனியர் பிரிவில் ஆதித்யாவும் வெண்கலப்பதக்கம் வென்றனர்.

-------------

சீனாவில் நடைபெற்றுவரும் சர்வதேச இளையோர் குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Chahat, Himanshi, Udan Singh உட்பட 15 பேர் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளனர்.

----------

ஆசிய கோப்பை ஹாக்கிப் போட்டியில் இந்தியா 4-3 என்ற கோல் கணக்கில் சீனாவை வென்றது.

பீகாரின் Rajgir-ல் நடைபெற்ற இப்போட்டியில் ஹர்மன் பிரீத் சிங் மூன்று கோல் அடித்தார்.

முன்னதாக நடைபெற்ற ஆட்டங்களில் ஜப்பான் 3-0 என்ற கோல் கணக்கில் கஜகஸ்தானையும், கொரியா 7-0 என்ற கோல் கணக்கில் சீன தைபே-யையும் மலேசியா 4-1 என்ற கோல் கணக்கில் பங்களாதேஷையும் வென்றன.

-------------

காமன்வெல்த் பளு தூக்கும் சாம்பியன் போட்டியில், இந்தியாவின் Sairaj Pardeshi தங்கப்பதக்கம் வென்றார்.

<<<<<<>>>>>